## ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் - நிர்மலா சீதாராமன் அடிக்கல் நாட்டினார்



ஆதிச்சநல்லூரில் உலகத் தரத்திலான அருங்காட்சியகம் அமைக்கும் பணிக்கு நேற்று அடிக்கல் நாட்டினார் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். உடன், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், கனிமொழி எம்.பி. மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டோர். படம்: மு.லெட்சுமி அருண்

**தூத்துக்குடி**: ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகத்துக்கு, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று அடிக்கல் நாட்டினார்.

தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூர் பரம்பு பகுதியில் 2021-ல் அகழாய்வுப் பணி தொடங்கியது. இங்கு உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கும் பணிக்கு நிர்மலா சீதாராமன் அடிக்கல் நாட்டிவைத்து, இந்தியாவிலேயே முதல்முறையாக அமைக்கப்பட்டுள்ள சைட் மியூசியத்தை திறந்துவைத்தார். ஆதிச்சநல்லூரில் இரு இடங்களில் அகழாய்வு நடைபெற்ற குழிகளுக்கு மேல் கண்ணாடித் தளம் அமைத்து, அங்கு கிடைத்த பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

விழாவில் நிர்மலா சீதாராமன் பேசியதாவது: நாட்டில் உள்ள பழமையான பகுதிகளின் தொன்மையையும், சிறப்பையும் அகழாய்வுகள் மூலம் வெளியே கொண்டு வருகிறோம். பழமையான நாகரிகங்கள் இருந்த 5 இடங்களில் அகழாய்வு மேற்கொண்டு, அங்கு அருங்காட்சியகங்கள் அமைக்கப்படும் என்று மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, ஆதிச்சநல்லூரில் அருங்காட்சியகம் அமைக்கப்படுகிறது.

ஏறத்தாழ 3,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பொருட்கள் இங்கு கிடைத்துள்ளன. இங்கிருந்து பெர்லின், நெதர்லாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட தொல்லியல் பொருட்களை மீண்டும் இங்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

இங்கு காட்சிப்படுத்தப்படும் தொல்லியல் பொருட்கள் குறித்த விவரங்களை செல்போன் மூலம் மக்கள் உடனுக்குடன் தெரிந்துகொள்ள ஏதுவாக க்யூஆர் கோடு வசதியை ஏற்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். அதேபோல, இங்கு திறந்தவெளி டிஜிட்டல் திரை அமைத்து, பழங்கால சமூகத்தின் தொன்மையை விளக்கும் ஒலி-ஒளிக் காட்சிகளுக்கும் ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மொழி, தமிழ்க் கலாச்சாரத்தின் மீது பிரதமருக்கு தனி அக்கறை உள்ளது. ‘சுதேஷ் தர்ஷன்’ என்ற பெயரில் 15 சுற்றுலாத் திட்டங்கள் தயாரிக்கப்பட் டுள்ளன. நாட்டின் பாரம்பரியம் மற்றும் தொல்லியல் தளங்களைப் பாதுகாக்கும் வகையில், 77 திட்டங்களை செயல்படுத்த ரூ.6 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், காஞ்சிபுரம், வேளாங்கண்ணி உள்ளிட்ட 12 பாரம்பரிய நகரங்களை மேம்படுத்தும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

தொல்லியல் தளங்களை தனியார் தத்தெடுத்து மேம்படுத்தும் திட்டத்தையும் அறிமுகம் செய்துள்ளோம். ஒவ்வொரு மாநிலத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில், டெல்லியில் 1.17 லட்சம் சதுரமீட்டர் பரப்பில் பெரிய அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளது.

சுதந்திரப் போராட்டத்தில் பழங்குடியினரின் பங்கை விளக்கும் வகையில், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் 10 மாநிலங்களில் அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட உள்ளன. 3.3 லட்சம் ஓலைச்சுவடிகளை மின்னணு முறையில் பதிவேற்றம் செய்து, 3 கோடி பக்கங்களாக உருவாக்கி உள்ளோம். இவ்வாறு நிர்மலா சீதாராமன் பேசினார்.

தமிழக மீன்வளம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், கனிமொழி எம்.பி., மத்திய தொல்லியல் துறை இயக்குநர் ஜெனரல் கிஷோர்குமார் பாசா, இணை தலைமை இயக்குநர் எஸ்.கே.மஞ்சுல், திருச்சி மண்டல இயக்குநர் அருண்ராஜ், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் கி.செந்தில் ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்

**சென்னை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் குடியரசு தலைவர் முர்மு இன்று பங்கேற்கிறார்**




சென்னை விமான நிலையத்தில் நேற்று குடியரசுத் தலைவரை வரவேற்ற ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் மு.க. ஸ்டாலின்.

**மசினகுடி**: குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகம் தெப்பக்காடு யானைகள் முகாமுக்கு நேற்று வந்து, ஆஸ்கர் விருது பெற்ற ஆவணப் படத்தில் நடித்த பாகன் பொம்மன், பெள்ளி தம்பதியை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

தெப்பக்காடு யானைகள் முகாமில், ரகு என்ற குட்டி யானையை பொம்மன், பெள்ளி தம்பதி வளர்த்தனர். இதனை கார்த்தகி கன்சால்வேஸ் என்ற பெண், ‘தி எலிபெண்ட் விஸ்பெரர்ஸ்’ என்ற பெயரில் ஆவணப் படமாக எடுத்தார். இது, இந்த ஆண்டுக்கான ஆஸ்கர் விருது வழங்கும் விழாவில், சிறந்த ஆவண படத்துக்கான விருதை பெற்றது.

இந்நிலையில், பிரதமர் மோடி கடந்த ஏப்ரல் மாதம் தெப்பக்காடு யானைகள் முகாமுக்கு வந்து பொம்மன், பெள்ளி தம்பதியை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின், இருவரையும் அழைத்து பரிசுத் தொகை வழங்கினார். இந்நிலையில், இந்த தம்பதியை சந்தித்து வாழ்த்து தெரிவிக்க குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நேற்று தெப்பக்காடு வளர்ப்பு யானைகள் முகாமுக்கு வந்தார்.

டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் மைசூர் வந்த அவர், அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் மசினகுடி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிகாப்டர் தளத்துக்கு பிற்பகல் 3.30 மணிக்கு வந்தார். அவரை அமைச்சர்கள் கா.ராமச்சந்திரன், மதிவேந்தன், வனத்துறை செயலர் சுப்ரியா சாஹூ, நீலகிரி மாவட்ட ஆட்சியர் சா.ப.அம்ரித் ஆகியோர் மலர் கொத்து கொடுத்து வரவேற்றனர். பின்னர், கார் மூலம் தெப்பக்காடு யானைகள் முகாமுக்கு சென்றார்.

அங்கு பொம்மன்- பெள்ளி தம்பதியை சந்தித்து வாழ்த்து தெரிவித்த குடியரசுத் தலைவர், வளர்ப்பு யானைகளுக்கு கரும்பு வழங்கினார். தொடர்ந்து, அங்குள்ள பழங்குடியின மக்கள், பாகன்களுடன் உரையாடினார்.

பின்னர் மாலை 5 மணிக்கு முகாமில் இருந்து மசினகுடிக்கு புறப்பட்டார். அப்போது அவரை பார்க்க சாலையோரம் ஏராளமான மக்கள் காத்திருந்தனர். அவர்களை பார்த்ததும் வாகனத்தை குடியரசுத் தலைவர் நிறுத்தி வெளியே வந்தார். மக்களை பார்த்து கையசைத்து, வணக்கம் தெரிவித்தார். அங்கு கூடியிருந்த குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு, தான் கொண்டு வந்த சாக்லேட்களை வழங்கி மகிழ்ந்தார்.

மசினகுடியை சேர்ந்த அனன்யா என்ற 11 வயது சிறுமி, தான் எழுதிய ‘தி பேர்ட்ஸ் ஆஃப் மசினகுடி’ என்ற புத்தகத்தை குடியரசுத் தலைவருக்கு வழங்கினார். நேற்று மாலை 5.30 மணிக்கு ஹெலிகாப்டர் மூலம் மைசூர் சென்று, அங்கிருந்து தனி விமானம் மூலம் சென்னை வந்தார்.


**ஆளுநர், முதல்வர் வரவேற்பு:** சென்னை விமான நிலையத்தில் அவரை ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் வரவேற்றனர். முதல்வர் ஸ்டாலின், ஒரிய மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூலை குடியரசுத் தலைவருக்கு பரிசளித்தார். பின்னர் முர்மு நேற்று இரவு ஆளுநர் மாளிகையில் ஓய்வெடுத்தார்.

இன்று சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள அரங்கில் நடைபெறும், சென்னை பல்கலைக்கழகத்தின் 165-வது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று உரையாற்றுகிறார். ஆளுநர் மாளிகையில் உள்ள தர்பார் மண்டபத்துக்கு பாரதியார் மண்டபம் எனப் பெயர் சூட்டும் விழாவிலும் பங்கேற்கிறார்.

7-ம் தேதி புதுச்சேரியில் உள்ள ஜிப்மர் மருத்துவமனை நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். 8-ம் தேதி விழுப்புரம் மாவட்டம் ஆரோவில்லில், நகர கண்காட்சியான மணிமந்திரைப் பார்வையிட்டு விட்டு சென்னை வழியாக டெல்லி புறப்பட்டு செல்கிறார்.

EVA STALIN IAS ACADEMY

**நிலவின் சுற்றுப்பாதையில் சந்திராயன்-3: இஸ்ரோ தகவல்**




**சென்னை**: சந்திரயான்-3 விண்கலம் நிலவின் சுற்றுப்பாதைக்குள் வெற்றிகரமாக செலுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திரயான்-3 விண்கலத்தை இஸ்ரோ வடிவமைத்தது. இந்த விண்கலம் எல்விஎம்-3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த ஜூலை 14-ம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. தற்போது பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து விண்கலத்தை இயக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் சந்திரயானை நிலவுக்கு நெருக்கமாக கொண்டு செல்லும் விதமாக அதன் புவி நீள்வட்ட சுற்றுப்பாதை தூரம் படிப்படியாக அதிகரிக்கப்பட்டது.

கடந்த ஆகஸ்ட் 1-ம் தேதி சந்திரயான் புவி ஈர்ப்பு விசையில் இருந்துவிலக்கப்பட்டு நிலவை நோக்கிசெல்லும்படி அதன் பயணப்பாதை மாற்றப்பட்டது. 5 நாட்கள் பயணத்துக்குபின் நிலவுக்கு அருகே விண்கலம் நேற்றிரவு சென்றது. இதையடுத்து விண்கலத்தை நிலவின் வட்ட சுற்றுப்பாதைக்குள் செலுத்தும் முயற்சி 7.15 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது. அப்போது சந்திரயான்-3 வெற்றிகரமாக நிலவின் சுற்றுப்பாதைக்குள் உந்தி தள்ளப்பட்டது.

இதுகுறித்து இஸ்ரோ வெளியிட்ட அறிவிப்பு: சந்திரயான்-3 விண்கலத்தில் உள்ள திரவ எரிவாயு இயந்திரம் இயக்கப்பட்டு நிலவின் வட்ட சுற்றுப்பாதைக்குள் உந்தி தள்ளப்பட்டது. தற்போது நிலவின் சுற்றுப் பாதையில் விண்கலம் வலம் வருகிறது. அடுத்தகட்டமாக நிலவின் சுற்றுப்பாதை உயரத்தை குறைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. முதல்கட்டமாக இன்று (ஆக.6) இரவு 11 மணியளவில் விண்கலத்தின் நிலவு சுற்றுப்பாதை மாற்றப்பட உள்ளது. அதன்பின் படிப்படியாக அதன் உயரம் குறைக்கப்பட்டு திட்டமிட்டபடி ஆக.23-ம் தேதி விண்கலம் நிலவில் மெதுவாக தரையிறக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY